**ஏழைகளிற்காதரவான பொருளாதார முன்னேற்றம் மற்றும் சமூக விரிவாக்கல் (பீஈஏசீஈ) செயற்திட்டம் (ஆக்கக்கூறு ஏ)- 2013 யூன் 30**

---

ஏழைகளிற்காதரவான பொருளாதார முன்னேற்றம் மற்றும் சமூக விரிவாக்கல் (பீஈஏசீஈ) செயற்திட்டத்தின் (ஆக்கக்கூறு ஏ) 2013 யூன் 30 இல் முடிவடைந்த ஆறுமாத கால நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை (ஜேஐசீஏ) என தற்போது அறியப்படும் சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கிக்கும் (ஜேபீஐசீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2003 மார்ச் 26 ஆம் திகதிய எஸ்எல் - பீ77 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் III ஆம் உறுப்புரையின் 4(7) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

ஏழைகளிற்காதரவான பொருளாதார முன்னேற்றம் மற்றும் சமூக விரிவாக்கல் (பீஈஏசீஈ) செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின்படி, நீர்ப்பாசன மற்றும் நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சு செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகும். வறுமையை குறைத்தல் விவசாயிகளின் உற்பத்தித்திறனை அதிகரித்தல் மற்றும் வடமேல், வடமத்திய மற்றும் மத்திய மாகாணங்களில் நீர்ப்பாசன வசதிகள் மற்றும் வருமானம் உருவாக்கும் நடவடிக்கைகள் போன்றவற்றைப் புனரமைப்பதனூடாக குறிப்பிடத்தக்களவு விவசாய அபிவிருத்தியை எய்துதல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாகும் கடன் உடன்படிக்கையின் படி செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 5,040 மில்லியன் ஆகும். அதில் ரூபா 2,509 மில்லியன் சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்படாது (ஜேபீஐசீ) செயற்திட்டம் தனது நடவடிக்கைகளை 2005 ஒக்தோபர் 06 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2013 மே 22 அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்த நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தத்துவங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும், பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

---

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதீப்பீடுகளினையும் அத்துடன் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு

அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான்பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பத்தகு தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளிற்கிணங்க கடனின் கீழான பற்றுதல்கள் இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா, என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலிற்காக கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க, செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டனவா என்பதும்,

(எ) கட்டு நிதி நிதியக் கணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரம்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2013 யூன் 30 இல் உள்ளவாறான மீதி அத் திகதியில் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திபரமாகச் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைச் சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தனவா என்பதுமாகும்

## 3. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தெரிவதும் எனது சிறந்த தகவல்களுக்கும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களிற்கிணங்கவும் இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழக்கூடிய சீராக்கங்களைத் தவிரவும்

(அ) செயற்திட்டம் 2013 யூன் 30 இல் முடிவடைந்த ஆறு மாத காலத்திற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க 2013 யூன் 30 இல்

உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள். அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2013 யூன் 30 இல் முடிவடைந்த 06 மாத காலத்திற்காக கட்டு நிதியம் கணக்கிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரம்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளின் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2013 யூன் 30 இல் உள்ளவாறான மீதி அத் திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கிக் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருபதிகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈ) மீது அவை கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளிற்கிணங்க மீளளிப்பு விண்ணப்பங்களிற்கு ஆதாரபூர்வமானவை என் நியாயபூர்வமாக நட்பிக்கை கெள்ள முடியும் என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

தரப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் தகவல்களின்படி, மீளாய்வு காலங்களிற்கான செயற்திட்டத்தின் செலவினம் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ரூபா 584,292,445 செலவினத்துடன் ஒப்பிடும் போது ரூபா 119,694,748 தொகையாக இருந்தது மீளாய்வாண்டுக்குரிய 06 மாத காலப் பகுதிக்கான செலவினம் முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 யூன் 30 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பு பின்வரும் கூற்றில் தரப்படுகின்றது.

| | 2013 யூன் 30 இல் முடிவடைந்த 6 மாத காலப்பகுதிக்கான செலவினம் | 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் செலவினம் | 2013 யூன் 30 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| நிலையான சொத்துக்கள் | 24,880,500 | 18,800,000 | 436,373,608 |
| வாகனங்கள் | 3,604,220 | - | 105,760,919 |
| நடைபெறும் வேலை | - | 220,374,486 | - |
| பயிற்சி மற்றும் இயலளவு கட்டியெழுப்புதல் | - | 18,295,560 | 430,440,316 |
| ஆலோசனைச் சேவைகள் | - | 10,605,290 | 978,498,884 |
| சிவில் வேலைகள் நில அளவையிடல் மற்றும் நிருமாணங்கள் | 91,210,028 | 316,217,109 | 4,471,352,910 |
| மொத்தம் | 119,694,748 | 584,292,445 | 6,422,426,637 |

## 4.2 கட்டு நிதி நிதியக் கணக்கு

தரப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றம் தகவல்களின் படி, மீளாய்வு காலப்பகுதிக்கான கட்டுநிதி நிதியக் கணக்கின் செயற்பாடுகள் மற்றும் 2013 யூன் 30 இல் உள்ளவாறான மீதி என்பன கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

| | 2013 ஆம் ஆண்டு | |
|---|---|---|
| | ஜப்பான் யென் | ரூபா |
| 2013 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 15,159,446 | 224,434,464 |
| மீள் நிரம்பல்கள் | 63,566,942 | 85,407,065 |
| வெளிநாட்டு நாணய மாற்று நட்டம் | - | (3,847,680) |
| | 78,726,388 | 103,993,849 |
| கழி:- காலப்பகுதியில் பற்றுதல்கள் | 77,878,765 | 102,880,496 |
| 2013 யூன் 30 இல் உள்ளவாறான மீதி | 847,623 | 1,113,353 |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 5.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

ரூபா 14,512 தொகைக்கான தொலைபேசிப் பட்டியல்கள் தொடர்பான 2013 யூன் 30 இல் உள்ளவாறான கொடுபட வேண்டியவற்றிற்கு நிதி ஏற்பாடு கணக்குகளிற்குக் கொண்டுவரப்படவில்லை.

### 5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.**

(அ) மீளாய்வாண்டில் முதலீட்டு நடவடிக்கைகளிற்கான தேறிய காசோட்டம் ரூபா 95,975,528 தொகையாகும். எனினும், இது காசோட்டம் கூற்றில் ரூபா 59,093,227 ஆகக் காட்டப்பட்டிருந்தது. ஆகையால் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசோட்டக் ரூபா 36,882,303 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும், ரூபா 119,694,748 தொகையான முதலீட்டுக் கிரயம் காசோட்டக் கூற்றில் காட்டப்பட்ட ரூபா 95,975,528 தொகையான மீதியுடன் உடன்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 230,812,254 கூட்டுத்தொகையான மீதிகள் பிழையான கணக்கீட்டு நடைமுறை காரணமாக நீர்ப்பாசன மற்றும் நீர்வளங்கள் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட முதலீட்டுக் கிரயக் கூற்றில் காட்டப்பட்ட மீதியுடன் இணங்கியிருக்கவில்லை.

### 5.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் ஆவணச் சான்றுகள் கணக்காய்விற்குத் தரப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | பெறுமதி | தரப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| நிலையான சொத்துக்கள் (செயற்திட்ட ஒருங்கிணைப்பு அலுவலகம் மற்றும் | 484,877,148 | காலப்பகுதி முடிவில் உள்ளவாறான மெய்மையாய்வு அறிக்கைகள் |

| | | | |
|---|---|---|---|
| செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு அனுராதபுரம்) | | | விநியோகிக்கப்பட்ட சொத்துக்களின் பெற்றுக் கொள்ளும் கட்டளைகள் (பொது 219) |
| செயற்திட்டத்திற்காக பிரசுரங்களின் வடிவமைப்பு மற்றும் அச்சிடல் | 1000 | 192,500 | இருப்புச் சான்றிதழ்கள் மற்றும் வழங்கல்கள் கட்டளைகள் (பொது 141) |
| நிலையான சொத்துக்களின் கொள்வனவு (01 மின்பிறப்பாக்கி மற்றும் 06 தண்ணீர் பவுசர்கள்) | | 25,132,500 | மூலக் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் |
| | | ------------------ | |
| | | 510,202,148 | |
| | | ======== | |

## 6. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 6.1 நிதிகளின் பயன்பாடு

நிதிகளின் நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மறறும் மீளாய்வாண்டில் நிதிகளின் பயன்பாடு மற்றும் 2013 யூன் 30 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பன தொடர்பான சில முக்கிய புள்ளி விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | நிதியளிக்க வேண்டுமென உடன்பட்ட தொகை | | வருடாந்த மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | மீளாய்வு காலப்பகுதியில் பயன்படுத்திய நிதிகள் | 2013 யூன் 30 இல் உள்ளவாறான பயன்படுத்திய தொகை |
|---|---|---|---|---|---|
| | ஐ.யென் (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | சவுதி றியால் (மில்) ரூபா (மில்) |
| ஜேஐசீஏ | 2,785 | 2,509 | - | 102 | 5,625 |
| இலங்கை அரசாங்கம் | 2,809 | 2,531 | - | 17 | 797 |
| மொத்தம் | 5,594 | 5,040 | - | 119 | 6,422 |

2013 ஆம் ஆண்டிற்காக நீர்ப்பாசன மற்றும் நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சின் ஆண்டுப் பாதீட்டில் செயற்திட்டத்திற்காக நிதியேற்பாடெதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எனினும், மீளாய்வாண்டில் ஏனைய வாக்குப் பணங்களிலிருந்து செயற்திட்டத்திற்கு ரூபா 78,000,000 நிதி ஏற்பாடு மாற்றம் செய்யப்பட்டிருந்தது. கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வு காலப்பகுதியில் செய்யப்பட்ட மொத்தச் செலவிளம் ரூபா 119,694,748 தொகையாகும். ஆகையால் ரூபா 41,694,748 ஆன மொத்த மேலதிகம் அவதானிக்கப்பட்டது.

### 6.2 செயற்திட்டத்தின் பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் கீழ் 09 பாரிய மட்ட நீர்ப்பாசன திட்டங்கள், 09 நடுத்தர மட்ட நீர்ப்பாசனத் திட்டங்கள் மற்றும் 80 சிறிய மட்ட நீர்ப்பாசனத் திட்டங்கள் என்பவற்றைப் பூர்த்தி செய்வதற்கு நீர்ப்பாசனத் திணைக்களம் பொறுப்பேற்றிருந்தது. மீளாய்வு காலப்பகுதியில் சிவில் வேலைகளிற்கு ரூபா 19,087,575 தொகை செலவிடப்பட்டிருந்த

போதிலும் மேற்கொள்ளப்பட்ட சிவில் வேலைகள் மீளாய்வுகாலப் பகுதிக்கான ஆண்டு செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் நிதிசார் மற்றும் பௌதிக முன்னேற்ற அறிக்கைகள் என்பன இன்மையால் கணக்காய்வில் உறுதிப்படுத்தமுடியவில்லை.

(ஆ) நீர்ப்பாசன மற்றும் நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சு செயற்திட்டப் பிரதேசங்களிற்கிடையில் கடன் நிகழ்ச்சித் திட்டத்தை அமுலாக்குவதற்காக ராஜரட்ட அபிவிருத்தி வங்கி மற்றும் வயம்ப அபிவிருத்தி வங்கி என்பவற்றுடன் 2008 ஓகஸ்த்து 05 இல் உடன்படிக்கைகளைச் கைச்சாத்திடப்பட்டிருந்தது. செயற்திட்டப் பிரதேசத்தில் கிராமங்களின் மற்றும் விவசாயிகள் நிறுவனங்களின் வருமான உருவாக்கல் நடவடிக்கைகளிற்கு உதவி வழங்குதல் பிரதான குறிக்கோள்களாகும். கடன் நிகழ்ச்சித்திட்ட உடன்படிக்கைகளின்படி, இந்த நோக்கத்திற்காக ரூபா 82,000,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தரப்பட்ட தகவல்களின்படி, வயம்ப அபிவிருத்தி வங்கி பிரதேசத்திலுள்ள 06 கிளைகளிற்கூடாக ரூபா 80,585,000 பெறுமதியான கடன்களை வழங்கியிருந்ததுடன் ரூபா 21,703,120 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

(ii) இரஜரட்ட அபிவிருத்தி வங்கி தொடர்பான 2013 யூன் 30 இல் உள்ளவாறான தகவல்கள் கணக்காய்விற்குத் தரப்பட்டிருக்கவில்லை.

(iii) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 3,508,980 பெறுமதியான கடன்களின் தவணைக் கட்டணங்கள் நிலுவையாக இருந்ததுடன் ரூபா 2,793,761 தொகையான மீதியை அறவிடுவதற்கு சம்பந்தப்பட்ட வங்கிகளால் தவணைத்தப்பியவர்களிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்று கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 6.3 சர்ச்சைக்குரிய விடயங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 ஒக்தோபரிலிருந்து 2013 மார்ச் வரை ரூபா 1,350,000 தொகை வருடாந்த வாடகையில் பெறப்பட்ட தனியார் தரப்புக்குச் சொந்தமான ஒரு கட்டிடத்தில் அனுராதபுர செயற்திட்ட அலுவலகம் செயற்படுத்தப்பட்டிருந்தது. எனினும், 2009 இல் வழங்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையின்படி, மாதாந்த வாடகை ரூபா 37,500 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், 18 மாத காலப்பகுதிக்கு ரூபா 675,000 ஆன மேலதிகக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. செயற்திட்ட அலுவலகம் வாடகை உடன்படிக்கையை நீடிக்காது இந்தக் கட்டிடத்தில் 2013 யூன் 30 வரை தொடர்ந்து செயற்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 2,352,000 (ரூபா 252,000 பெறுமதி சேர் வரி உள்ளடங்கலாக) மற்றும் ரூபா 22,780,500 பெறுமதியான முறையே ஒரு மின்பிறப்பாக்கி மற்றும் 06 நீர் பவுசர்கள் செயற்திட்டக் கால முடிவில் செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், செயற்திட்ட முடிவுகள் கட்டிடத்தில் அத்தகைய கொள்வனவு நியாயமானதென கணக்காய்விற்குக் காரணங்கள் விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அத்தகைய சொத்துக்கள் மாகாவலி அதிகார சபையின் நிருவிய பண்ணனைக்குக் கையளிக்கப்பட்டிருந்தன என்று அவதானிக்கப்பட்டது. அதற்கு மேலாக 05 கோழி வளர்க்கும் கூடாரங்கள் 2012 இல் ரூபா 8,513,972 கிரயத்தில் நிருமாணிக்கப்பட்டதுடன் ரூபா 1,973,876 தொகை மீளாய்வாண்டில் நிறுவிய பண்ணையில் பால் தொழிற்சாலை புதுப்பிப்பதற்கு செலவிடப்பட்டிருந்தது. எனினும், நிராவிய பண்ணையின் நடவடிக்கைகள் செயற்திட்டத்தின் கீழ் வரவில்லை.

(இ) மீளாய்வு காலப்பகுதியில் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டிருக்காத ராஜங்கன மாதிரிப் பண்ணை மற்றும் நொச்சிகாமம் இயற்கைப் பூங்கா என்பவற்றில் சில நிருமாணங்கள் மற்றும் முன்னேற்றங்களிற்காக ரூபா 4,233,702 ஆன கொடுப்பனவு மேற்கொள்ளப்படடிருந்தது.

## 6.4 செயற்திட்டத்தின் கணக்கொழிப்பு நடவடிக்கைகள்

-----------------------------------------------------------------------------------

செயற்திட்ட கணக்கொழிப்பு 2014 ஆகஸ்ட் 31 வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், செயற்திட்டத்தால் 2013 யூலை 01 தொடக்கம் 2013 திசெம்பர் 31 வரையான காலத்திற்கிடையில் ரூபா 25,420,885 தொகை செலவிடப்பட்டிருந்தது.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வாகனங்கள் இயந்திரங்கள் ஆய்வு கூட மற்றும் நிலஅளவை உபகரணங்கள் முதலியன உள்ளடங்களாக ரூபா 484,877,148 கிரயத்தல் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் செயற்திட்ட பூர்த்தியாக்கல் முடிவில் பல்வேறு அரசாங்க முகவர்களிற்கு கையளிக்கப்பட்டிருந்தன. எனினும், அந்த அரசாங்க முகவர்களால் பொறுப்பேற்கப்பட்ட சொத்துக்களின் பட்டியல்கள், வாகனப் பதிவுப் புத்தகங்கள் முதலியவாறான ஆவணச் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்காய்விற்குத் தரப்பட்ட தகவல்களின்படி, 23 வாகனங்கள் அரசாங்க முகவர்களிற்கிடையில் விநியோகிக்கப்பட்டிருந்தன. எனினும், அத்தகைய வாகனங்கள் நிதிக்கூற்றுகளுடன் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நீர்ப்பாசனத் திணைக்களத்தின் றம்பேவா வேலைத்தளத்திற்கு 46 மோட்டார் சைக்கிள்கள் கையளிக்கப்பட்டிருந்த போதிலும், மோட்டார் சைக்கிள்கள் கையளித்திருந்தமைக்கான காரணங்கள் விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அரசாங்க முகவர்களிற்கிடையில் விநியோகிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் செயற்திட்டத்தால் வழங்கப்பட்ட விநியோகப் பட்டியலில் பெறுமதிகள் இல்லாமை காரணமாக நிதிக்கூற்றுக்களுடன் ஒப்பீடு செய்ய முடியவில்லை.

(உ) செயற்திட்ட நடவடிக்கைகள் 2013 யூன் 30 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டு விட்ட போதிலும் ஏழு வங்கிக்கணக்குகள் 2013 திசெம்பர் 31 வரையில் மூடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) செயற்திட்ட நடவடிக்கைகளின் கீழ் வராத மகாவலி அதிகார சபையின் நிரவிய பண்ணைக்காக ரூபா 7,300,000 மற்றும் ரூபா 15,675,310 கிரயத்தில் முறையே உறையச் செய்யும் கருவியுடன் கூடிய பொசோக் கப் மற்றும் பால் பதிலிடும் அலகு என்பன கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-------------------------------------------------------------------

பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) கணக்கொழிப்பு செயன்முறை
(இ) கடன் நிகழ்ச்சித்திட்டம் மீதான கட்டுப்பாடு
(ஈ) நிலையான சொத்துக்களின் விநியோகம்